# நோன்பின் பெயரால் போலி ஹதீஸ்கள்

[ Tamil – தமிழ் – تاميلي ]

M.S.M.இம்தியாஸ் யூசுப் ஸலபி

2014 - 1435

IslamHouse.com

# الأحاديث الضعيفة الواردة عن الصيام

« باللغة التاميلية »

محمد إمتياز يوسف

2014 - 1435

IslamHouse.com

# நோன்பின் பெயரால் போலி ஹதீஸ்கள்

MSM . இம்தியாஸ் யூசுப் ஸலஃபி

நோன்பின் மாண்புகளை சிறப்புகளை குறித்து நபி (ஸல்) அவர்க்ள கூறிய ஆதாரபூர்வமான அநேக ஹதீஸ்கள் உள்ளன. அந்த ஹதீஸ்களை மக்கள் தெரிந்து அமல்கள் செய்ய வேண்டும். ஆதாரமற்ற செய்திகளை நிராகரித்திட வேண்டும். அமல்களின் பெயரால் ஆதரப் பூர்வமான ஹதீஸ்கள் காணப்படுவது போல் ஆதாரமற்ற போலியான செய்திகளும் ஹதீஸ்களின் பெயரால் காணப்படகின்றன.

அல்லாஹ்வினால் ஒரு அமல் அங்கீகரிக்கப் பட வேண்டுமானால் அந்த அமலு க்கு நபியவர்களின் வழிகாட்டல் இருக்க வேண்டும். அந்த வழிகாட்டுதலை எடுத்து காண்பிப்பது ஆதாரபூர்வமான ஹதீஸ் களாகும். எனவே. எந்தவொரு செயலை

செய்வ தானாலும் அதற்கு ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் உண்டா? என்பதை முதலில் கவனிக்க வேண்டும்.

ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் இருந்தால் அமல்செய்ய வேண்டும். ஆதரபூர்வ மற்ற பலஹீனமான பொய்யான ஹதீஸ்கள் இருந்தால் அமல்செய்யக்கூடாது. இந்த ஒரு அடிப்படையை புரிந்து கொண்டால் தான் சிறந்த முறையில் அமல்செய்ய முடி யும்.

இன்றைக்கு முஸ்லிம்கள் மத்தியில் அமல்களின் சிறப்புக்கள் பெயரால் ஆதாரமற்ற செய்திகள்தான் ஹதீஸகளின் பெயரால் காணப்படுகிறன. அவைகளை வைத்து மக்கள் அமல் செய்ய ஆர்வம் காட்டி வருகிறார்கள். அந்த வரிசையில் ரமழானின் பெயரால் நோன்பின் பெயரால் காணப் படுகின்ற ஆதரமற்ற செய்திகளை தொகுத்து தருகிறேன்.

பின்வரும் செய்திகள் ரமழான் காலத்தில் பள்ளி வாசல்களில் பயான் செய்யப்

படுகின்றன. ஆனால் அவை அனைத் தும் பலஹீனமான ஆதாரமற்ற உறுதியற்ற செய்திகள். அவைகளை வைத்து அமல் செய்ய முடி யாது என்பதை மீண்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

- ரமழானின் ஆரம்ப (பத்து நோன்பு களு)ம் ரஹ்மத்தாகவும் அதன் நடுப்பகுதி (பத்து நோன்புகளும்) மஃபிரத்தாகவும் அதன் இறுதி பகுதி (கடைசிப் பத்து) நரக விடுதலையாகவுதம் உள்ளது.( நூல் இப்னு குஸைமா)

இதன் அறிவிப்பாளர் தொடரில் அலி இப்னு ஸைத் இப்னு ஜுத்ஆன் என்பவர் இடம்பெறுகிறார். இவர் பலஹீனமானவர். மேலும் இந்த செய்தியை பதிவு செய்த இமாம் இப்னு குஸைமா (ரஹ்) அவர்கள் இது பலவீனமானது என்பதை குறிக்க இது உறுதியானதாக இருந்தால் என்ற வார்த்தையில் குறிப்பிடுகிறார்கள். பலஹீன

மான ஹதீஸை அடையாளம் காட்டுவதற்கு இமாம்கள் கையாளும் முறை இது.

- ரமழானில் உள்ள சிறப்புகளை அறிந்தால் வருடம் பூராவும் ரமழானாக இருக்க வேண்டும் என எனது உம்மத்த வர்கள் ஆசைகொள்வார்கள் (நூல்: அபூயஃலா)

இதன் அறிவிப்பாளர் தொடரில் ஜரீர் இப்னு அய்யூப் என்பவர் இடம்பெறுகிறார். இவர் பலஹீனமானவர். மேலும், இது பலஹீன மானது என்பதை இமாம் இப்னு குஸைமா (ரஹ்) மேல் கூறியவாறு சுட்டிக் காட்டுகிறார்கள்.

- எனது உம்மத்தில் ஒரு மனிதனை கண்டேன். அவர் தாகத்தோடு தடாகத்திற்கு (அவ்லுல் கவ்ஸரக்கு) வரும் போதெல்லாம் தடுக்கப்பட்டார். அப்போது நோன்பு வந்து அவருக்கு நீர் புகட்டியது. (நூல்: தபரானி)

இதன் அறிவிப்பாளர் தொடரில் சுலைமான் இப்னு அஹ்மத் அல்வாஸிதி என்பவரும் காலித் இப்னு அப்துர் ரஹ்மான் அல் மக்சூமி என்பவரும் இடம்பெறுகிறார்கள். இவ்விருவரும் பலஹீன மானவர்கள். இமாம் இப்னு ரஜப் (ரஹ்) அவர்கள் இதை பலஹீ னமானது என விமர்சனம் செய்கிறார்கள்.

- நோன்பாளிகளின் வாய்களிலிருந்து கஸ்தூரி வாடை வெளிப்படுகிறது. அவர் களுக்கு அல்லாஹ்வின் அர்ஷுக்குக் கீழ் (உணவு) தட்டு வைக்கப்பட்டுள்ளது.
- இமாம் சுயூத்தி (ரஹ்) அவர்கள் அத்துர் ருல் மன்சூர் 1;182 எனும் நூலில் இச்செய்தியை குறிப்பிடுகிறார்கள். ஆனாலும் இது பலஹீனமானது என இமாம் இப்னு ரஜப் (ரஹ்) அவர்களும் ஏனைய இமாம்களும் விமர்சனம் செய்கிறார்கள்.

- நோன்பாளியின் தூக்கம் இபாதத் தாகும்

இமாம் சுயூத்தி (ரஹ்) அவர்கள் அல் ஜாமிஉஸ் ஸகீரில் (9293) குறிப்பிடுகிறார் கள். இதில் அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்பா என்பவர் இடம்பெறுகிறார். இவர் பலஹீனமானவர் என்று இமாம் ஸைனுத் தீன் அல் ஈராகி (ரஹ்) இமாம் பைஹகி (ரஹ்) இமாம் சுயூத்தி (ரஹ்) ஆகியோர் குறிப்பிடுகிறார்கள். ( நூல்: அல்பிர்தவ்ஸ் 4;248) (இந்தச் செய்தியை வைத்தே சிலர் பகல் முழுவதும் தூக்கத்தில் காலத்தை கழிக்கிறார்கள்)

- எவர் ரமழானில் இஷா தொழுகையை ஜமாஅத்தோடு தொழுகிறாரோ அவர் லைலதுல் கத்ர் இரவை அடைந்து கொண்டவராவார். ( நூல் இஸ்பஹானி).

இது முர்ஸல் எனும் பலஹீனமான செய்தியாகும். இப்னு முஸய்யப் (ரஹ்) அவர்களின் கூற்றாக பதிவு செய்யப் பட்டுள்ளது.

இப்னு குஸைமாவில் வரும் இச்செய்தி யில் உக்பத் இப்னு அபீல் ஹஸ்னா என்ப வர் இடம்பெறுகிறார். இவர் யார் என அறியப்படாதவர். பலஹீனமானவர் (மஜ் ஊல்) என இமாம் இப்னு முதீனி (ரஹ்) கூறுகிறார்.

- நோன்பு பொறுமையின் பாதியாகும் (நூல்: திர்மிதி, இப்னுமாஜா).

இதன் அறிவிப்பாளர் தொடரில் வரும் மூஸா இப்னு உபைதா என்பவர் பலஹீனமானவர் என அஷ் ஷெய்க் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) குறிப்பிடுகிறார்.

- மாதங்களின் தலைவர் ரமழானாகும். அம்மாதங்களில் கண்ணியமான மாதம்

துல்ஹஜ் மாதமாகும். ( நூல்: பஸ்ஸார், தைலமி)

இதன் அறிவிப்பாளர் தொடரில் யஸீத் இப்னு அப்துல் மாலிக் அன்னுபைலி என்பவர் இடம்பெறுகிறார். இவர் பலஹீனமானவர் என்று இமாம் ஹைஸமி (ரஹ்) அவர்கள் மஜ்மூஉல் ஸவாத் எனும் நூலில் குறிப் பிடுகிறார்கள். (3ஃ140)

- வானத்தில் சில மலக்குகள் இருக்கி றார்கள். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட் டார்கள். ரமழான் மாதம் வந்துவிட்டால் முஹம்மது நபியின் உம்மத்தினருடன் சேர்ந்து கொள்ள அவர்கள் அல்லாஹ் விடம் அனுமதி கேட்பார்கள் (நூல்: பைஹகி)

பைஹகி நூலில் இது அலி (ரலி) அவர் களின் வார்த்தையாக (மவ்கூப்) பதிவா

கியுள்ளது. மேலும் இச்செய்தி பலஹீன மானது என இமாம் சுயூத்தி (ரஹ்) அவர்கள் அத்துர்ருல் மன்சூரில் (8;582) குறிப்பிடுகிறார்கள். மேலும் கன்ஸுல் உம்மால் (8;410) நூலிலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

- நோன்பு திறக்கும்போது ஓதும் துஆ: அல்லாஹும்ம லக ஸும்து வபிக ஆமன்து வலாரிஸ்திக அப்தர்து| என்று வரும் செய்தி அபூதாவூத் (2358) மற்றும் இப்னு ஸுன்னு பிஅமலில் யவ்மி வல்லைலா (481) எனும் நூலில் பதிவாகியுள்ளது.

இதன் அறிவிப்பாளர் தொடரில் அப்துல் மலிக் பின் ஹாரூன் பின் அன்தரா என்பவர் இடம்பெறுகிறார். இவர் பலஹீனமானவர் என்று இமாம் அஹ்மத் (ரஹ்) தாரகுத்னி

(ரஹ்) இமாம் அபூ ஹாதம் (ரஹ்) குறிப்பிடுகிறார்கள்.

இது உறுதியான செய்தியல்ல என இமாம் இப்னுல் கையூம் (ரஹ்) குறிப்பிடு கிறார்கள். (நூல்: ஸாதுல் மஆத் (2;54)

- ரமழானில் அல்லாஹ்வை நினைவூட்டு பவர் (திக்ரு செய்பவரது) பாவங்கள் மன்னிக்கப்படும்

இமாம் சுயூத்தி (ரஹ்) அவர்களுடைய அல்ஜாமிஉஸ் ஸகீர் நூலிலும் தபரானியிலும் பைஹகியிலும் இச்செய்தி பதிவாகியுள்ளது. இதன் அறிவிப்பாளர் தொடரில் ஹிலால் இப்னு அப்துர் ரஹ்மான் என்பவர் இடம் பெறுகிறார். இவர் பலஹீனமானவராவார்.

- யா அல்லாஹ் ரஜப் மாதத்திலும் ஷஃபான் மாதத்திலும் எமக்கு அருள் புரிவாயாக! ரமழானை அடைந்து

கொள்ளும் பாக்கியத்தை தருவாயாக (நூல்: பஸ்ஸார். தபரானி)

இந்த செய்தியின் அறிவிப்பாளர் வரிசையில் ஸாயித் பின் அபீ ருகாத் என்பவர் இடம்பெறுகிறார். இவர் ஹதீஸ் கலையில் மறுக்கப்பட்டவர் என்று இமாம் புகாரி (ரஹ்) அவர்களும் இவர் பலஹீனமானவர் என்று இமாம் நஸயீ (ரஹ்), இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ்) அவர்களும் கூறுகிறார்கள்.

- நோன்பாளியாக இருக்கும்போது பகலில் (கண்ணுக்கு) சுர்மா) இடக்கூடாது (நூல் அபூதாவூத்)

இமாம் இப்னு முயீன் (ரஹ்) அவர்கள் இச்செய்தி நிராகரிப்பட வேண்டியதென விமர்சனம் பண்ணுகிறார்கள்.